# அம்மன்குடி மகிஷாசுரமர்த்தினி ஆலயம்

## சாந்திப்பிரியா



கும்பகோணத்தில் இருந்து சுமார் 20 கல் தொலைவிலும், திருவிடைமருதூரில் இருந்து சுமார் ஒரு கல் தொலைவில் உள்ளது அம்மன்குடி கிராமம். இந்த கிராமத்தில் உள்ள அம்மன் ஆலயம் சுமார் ஆயிரம் ஆண்டிற்கு முற்பட்டது. இராஜராஜ சோழனின் படைத் தளபதியாக இருந்த கிருஷ்ணராய பிரும்மராயன் என்பவர் இந்த ஆலயத்தை நிறுவியதாக அங்குள்ள கல்வெட்டுச் செய்திகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. இந்த ஆலயம் தோன்றியதைப் பற்றி கூறப்படும் வாய் மொழி கதை இது.

மகிஷாசுரமர்தினி தேவி பார்வதியின் தேவியின் அவதாரம். ஒருமுறை தேவேந்திரனான இந்திரனை தோற்கடித்து ஆட்சி செய்து வந்த மகிஷா என்ற அசுரன் தன்னைத் தவிற வேறு எவரையும் வணங்கக் கூடாது என்ற எண்ணத்துடன் அனைத்து தெய்வங்களின் பக்தர்களையும், தேவர்களையும் கொன்று குவித்து வரத் துவங்கினான். உலகில் யாகங்களும், பூஜைகளும் நின்றன. மகிஷாசுரனைக் கண்டு பயந்துபோன தேவர்கள் மலைகளில் இருந்த குகைகளிலும் மறைவிடங்களிலும் சென்று வாழத் துவங்கினர்.

ஒரு முறை சிவபெருமானும், பகவான் விஷ்ணுவும் பல்வேறு பிற தெய்வங்களுடன் அமர்ந்து கொண்டு விவாதித்துக் கொண்டு இருக்கையில் மகிஷாசுரனின் அட்டகாசம் பற்றிய செய்தி அவர்களுக்குக் கிடைக்க இருவருடைய முகங்களும் கோபத்தால் சிவந்தது. அவர்களுடைய முகத்தில் இருந்து வெளி வந்த கோபக் கனலில் இருந்து ஒரு அழகிய பெண் தோன்றினாள். அவளை தன் தெய்வ கணங்களில் இருந்து பார்வதி தேவியே தோற்றி அனுப்பி இருந்தாள். சிவன் வடிவமாக முகமும், விஷ்ணுவின் அம்சமாக பல கைகளையும், கால்கள் பிரும்மாவையும், தலை எமனாகவும்,இடுப்பு

பூமித் தாயாகவும் கொண்ட தோற்றம் கொண்டு அவதரித்த அவளே அந்த அசுரன் மகிஷாசுரனை வதம் செய்ய வந்தவள் என்பதைப் புரிந்து கொண்ட அனைத்து கடவுட்களும் அவளுக்கு தங்களிடம் இருந்து பல்வேறு ஆயுதங்களையும் சக்தியையும் தந்தனர். இமய மலை மன்னன் அவளுக்கு தன்னிடம் இருந்த ஒரு சிங்கத்தைக் கொடுத்தார். அந்த சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு அந்த தேவி மகிஷாசுரனை அழிக்கக் கிளம்பினாள். கடுமையான யுத்தம் நடந்து முடிந்தது. யுத்தத்தில் மகிஷாசுரனுடைய படைத் தளபதிகள் அழிந்தனர். முதலில் காளை வடிவில் வந்த மகிஷாசுரன் பல்வேறு வடிவங்களை எடுத்தபடி தன்னைக் கொல்ல தேவி எய்த ஆயுதங்களில் இருந்து தப்பினாலும் கடைசியாக மீண்டும் அவன் காளை உருவில் வந்த பொழுது அவனைக் கீழே தள்ளி தனது இடது காலினால் பூமியில் அவனை அழுத்திப் பிடித்து திரிசூலாயுதத்தினால் அவனைக் கொன்றாள். அதனால் அந்த தேவியின் பெயர் மகிஷாசுரனை அழித்த மகிஷாசுரமர்தினியாயிற்று.

மகிஷாசுரன் அசுரன் என்றாலும் அவன் சிவ பக்தன். ஆகவே அவன் தன்னுடைய கழுத்தில் சிவலிங்கம் ஒன்றை அணிந்திருந்து சிவபெருமானிடம் பல வரங்கள் பெற்று இருந்தான். அவனைக் கொன்ற பொழுதும் அவன் கழுத்தில் சிவலிங்க மாலையை அணிந்து கொண்டு இருந்ததினால், அவனைக் கொன்ற பாவத்திற்கு தேவிக்கு சிவதோஷம் ஏற்பட்டது. அந்த தோஷம் விலக என்ன செய்ய வேண்டும் என சிவபெருமானிடமே அவள் கேட்க அவள் காவிரி ஆற்றில் குளித்து விட்டு பன்னிரண்டு வருடம் தவம் இருக்க வேண்டும். அந்த தவத்திற்கு இடையூறு ஏற்படாமல் இருக்க அதன் கரையில் பகவான் வினாயகரை பிரதிஷ்டை செய்துவிட்டு தவத்தை மேற் கொள்ள வேண்டும் என சிவன் கூறினார்.

ஆகவே தனக்கு ஏற்பட்ட தோஷம் விலக வேண்டும் என்பதற்காக மகிஷாசுரமர்தினி தேவி பூமியில் வந்து இடம் தேடி அலைந்தாள். துக்காட்சி என்ற இடத்திற்கு வந்து தனது சூலத்தில் படிந்திருந்த இரத்தக்கறையை கழுவுவதற்கு இடம் தேடி துக்காட்சியின் அருகிலுள்ள ஒரு குளத்தில் தனது சூலத்தை கழுவினாள்.முடிவாக அம்மன்குடிக்கு வந்து அங்கு இருந்த காவிரி ஆற்றில் குளித்துவிட்டு, கரையில் தான் செய்ய இருந்த தவத்திற்கு இடையூறு ஏற்படாமல் இருக்க பகவான் வினாயகரையும் பிரதிஷ்டை செய்து விட்டு பன்னிரண்டு வருடங்கள் தவத்தில் இருந்தாள். பன்னிரண்டு வருடங்கள் கழிந்தன. அவளுடைய தவத்தை மெச்சி கைலாயத்தில் இருந்து வந்த சிவபெருமான் அவள் முன் தோன்றி அவளுடைய தோஷங்கள் அனைத்தும் விலகி விட்டன என்று கூறி விட்டு மறைந்தார். சாப விமோச்சனம் பெற்றதும் அங்கேயே தங்க விரும்பிய தேவியானவள் இராஜராஜ சோழனின் படை தளபதியின் கனவில் தோன்றி, தனக்கு அங்கு ஒரு ஆலயம் எழுப்புமாறு கட்டளை இட்டாள். வந்த ஆணைப்படி அந்த தளபதியும் எட்டு கைகளைக் கொண்ட அவளுடைய சிலை ஒன்றை கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் வகையில் பிரதிஷ்டை செய்து ஒரு ஆலயம் படைத்தான். அதுவே அம்மன்குடி ஆலயம் எனப்பட்டது. அந்த இடத்தில் வந்து இராஜராஜ சோழனின் படை தளபதி ஆலயத்தை அமைத்ததினால் அந்த இடத்திற்கு இராஜராஜேஸ்வர தேவி தபோவனம் என்ற பெயர்களும் ஏற்பட்டன. அங்குள்ள நதியில் அவள் அசுரனைக் கொன்ற வாளினை கழுவி சுத்தம் செய்ததினால் தோஷத்தைப் போக்கிய நதித் தீர்த்தம் பாப விமோசன ஷேத்திரமாக கருதப்பட்டு, நதியில் குளித்தால் பாப விமோசனம் பெறலாம் என்ற நம்பிக்கைகள் தோன்றின. அது மட்டும் அல்ல திருமணம் ஆகாத அந்த தேவி சிவபெருமானின் பிள்ளையான

பகவான் வினாயகரையே தனக்குக் காவலாக வைத்திருந்ததினால் அந்த ஆலயத்திற்கு சென்று வழிபட்டால் பிள்ளை பிறக்காதவர்களுக்கும் குழந்தைப் பேறு கிடைக்கும் எனவும், மூச்சை அடக்கிக் கொண்டு தபம் இருந்ததினால் அவளை அந்த ஆலயத்தில் சென்று வணங்கினால் மூச்சு விடக் கஷ்டம் தரும் ஆஸ்துமா போன்ற வியாதிகள் குணமாகும் என்ற நம்பிக்கைகள் தோன்றின.

அம்பாளுக்கு முக்கியத்துவம் தரும் இடமாக இருந்தாலும் இந்த ஆலயத்தில் கைலாசநாதரே மூலவராக இருக்கிறார். கைலாசநாதரின் வலதுபாகத்தில் துர்க்கை அம்மன் காட்சி தருகிறாள். எட்டு கைகளுடன் எட்டுவித ஆயுதங்கள், தங்க சிம்ம வாகனம், மகிஷன் தலை ஆகியவற்றுடன் சாந்த முகத்துடன் காட்சி தருகிறாள். மகிஷாசுரமர்த்தினி தேவி என்றும் இவளை கூறுகிறார்கள். ராஜராஜசோழனின் படைத்தலைவர்களான கிருஷ்ணன், இராமன், பிரம்மராயன் ஆகியோர் இங்கு வாழ்ந்துள்ளனர். நவக்கிரகங்களுக்கு அதிபதியாக துர்க்கை அம்மன் விளங்குவதால் இங்கு நவக்கிரகங்களுக்கு தனி சன்னதி கிடையாது. செவ்வாய்க்கிழமைகளில் விசேஷ பூஜை உண்டு.

# Ammankudi Mahishasuramardini Temple

**Santhipriya**



Ammankudi temple lay in between the cities of Thiruvidaimarudoor, Tanjore and Kumbakonam in Tamilnadu, India. Ammankudi, a small village where the temple has been constructed is twenty KM from Kumbakonam and one KM from Thiruvidaimarudoor. From the inscriptions available from the temple site it is learnt that the temple has been constructed by one of the chieftain of Emperor Rajaraja Chola, a great Tamil King. The temple has come up thousand years ago.

The legend of the Devi enshrined in this temple goes like this. Once upon a time a demon called Mahishasura invaded Indira log, defeated Lord Indira and captured Indira Log. He became so powerful and arrogant to pronounce to the celestial that henceforth none be worshipped except him. Further he unleashed a reign of terror on all the three worlds- earth, heaven and the nether worlds- and tortured and killed many celestial and the folks living there. Afraid of the atrocities of the demon, everyone ran for safety and hid in the mountains and caves. No divine could defeat or contain the atrocities of the demon. Folks stopped performing Yagya and other pujas fearing to Mahishasura.

Once when Lord Shiva and Lord Vishnu were in a serious discussion along with other divines and celestial, the reign of terror Mahishasura unleashed on the three worlds reached

attention. Their eyes turned red in anger and beams of fierce rays emerged from their eyes merged into one resulting in the appearance of a female deity who was an aspect of Goddess Parvathi. Her appearance reflected the fury of Lord Shiva, hands the strength of Lord Vishnu, legs that of Lord Brahma, head that of Lord Yama and hip that of mother earth. Everyone understood that the Goddess has manifested with the aspects of powerful divines to vanquish the demon Mahishasura. While other divines and celestial forces gave her several of their weapons, King of Himalaya gave her a powerful lion to fight the demon. She sat on the Lion, marched to the palace of the demon and in the fierce battle continued entire army of Mahishasura got destroyed. Finally to deceive and distract the attention of the Devi, the demon Mahishasura changed his appearances many time, from that of a buffalo to other animals. But at the end when he took the form of a buffalo, Devi pushed and pressed him over the ground with her left leg, and killed him with a Trisul. Therefore her name became Mahishasuramardini, female goddess who vanquished Mahishasura, the demon.

Mahishasuramardini Devi was an indeed incarnation of Goddess Parvathi in the form of Durga. Though Mahishasura was a demon, he was an ardent devotee of Lord Shiva and always wore a Shiva Ling around his neck after obtaining several boons from him.

Therefore the Goddess Mahishasuramardini was afflicted with Shiva Dosha (sin) though unknowingly for insulting the Shiva Linga with her leg and for killing the devotee of Lord Shiva. She approached Lord Shiva to purify her from sin. He advised her that she should go on penance in the bank of River Kaveri for twelve years after taking bathe in the same river.

She took the advice seriously and went to Ammankudi where river Kaveri flew, washed her sword stained with the blood of the demon, took bath, and sat in taps for twelve years. As advised by Lord Shiva, Devi Mahishasuramardini, an aspect of Goddess Parvathi installed an idol of Lord Vinayaga to guard against others and from getting disturbed during her penance on the banks of the river. Pleased with her tapas Lord Shiva appeared before her after twelve years and purified her from the Dosha. Thereafter she appeared in the dream of the chieftain of King Rajaraja Chola and ordered him to construct a temple for her in that place. He complied to has been referred as Devi Tapovana (Place where Devi remained on tapas) and Raja Rajeswarapuram to give credit to Rajaraja Chola's chieftain.

Because Devi chose the river to wash the sword with which she slew Mahishasura, the theertha got the name Paapa Vimochana Theertham meaning the river which removes the ill effects of sins.

Therefore everyone believe that taking bath in the river would remove the ill effects of all the sins (Dosha). Since she kept on guard Lord Shiva's son Lord Vinayaga who was her son (in her form as Goddess Parvathi but not as Goddess Mahishasuramardini who was a virgin goddess in that form) to guard her, the belief has been that the childless couple will beget child if they worshipped her in Ammankudi. Also as she remained in tapas controlling her breath, anyone suffering from breathing or Asthma like diseases would also get relief from its severity if they and worshipped her here.